## தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்ட செயலகம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று,அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 திகதிய இலக்கம் 271/2019 கொண்டஅரச கணக்குகள்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்களினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின்பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள்,

செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதல் பெறப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமையினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்என்பன மதிப்பிடப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த முன்வைப்பு மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன்நேரொத்ததாகுமெனவும்,
(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுகள் தொடர்பாக என்னால்செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தமை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பரீட்சை மீதி பிரகாரம் 2019 ஆண்டில் ஏனைய பெறுவனவுகளின் பெறுமதி மற்றும் நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அப் பெறுமதிக்கிடையில் ரூபா 281,873,012 ஆன இணங்காத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வித்தியாசத்தை ஒப்பிட்டு சரியாக நிதிக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். | இத் தவறை எதிர்வரும் ஆண்டு நிதிக் கூற்று தயாரிக்கையில் சரிசெய்வதாக. |

### 1.6.2 நிதி நிலமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 03 திகதிய இலக்கம் 271/2019 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தி பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் திறைசேரியின் இறுதி கணக்கு கூற்றின் மீதியுடன் இணங்க | 2019 திசெம்பர் 03 திகதிய இலக்கம் 271/2019 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதி | பொது வைப்புக் கணக்கு மற்றும் திறைசேரி வெளியீடு பிரகாரம் மீதிகள் வித்தியாசமில்லையென. |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதும், நிதி நிலமை பற்றிய கூற்றின் பிரகாரம் வைப்புப் கணக்கு மீதி மற்றும் திறைசேரி வெளியீடு பிரகாரம் அத்திகதியன்று அம்மீதிக்கிடையில்,ரூபா 25,919,464 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிலமை பற்றிய கூற்றில் வைப்புப் கணக்கு மீதியாக ரூபா 442,433,369 காட்டப்பட வேண்டும். | |
| (ஆ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள 06 உருப்படிகளின் பேரேட்டு தகவல்களின் பொலிப்பு மற்றும் நிதிக் கூற்றின் எசீஎ– 6 படிவம் பிரகாரம் அவ் உருப்படிகளிற்கிடையில் ரூபா 500,414,005 ஆன இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல், ஒப்பிடுதலின் மூலம் உண்மை தன்மையை உருதி செய்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | சில பிரதேச செயலகங்களில் ஆரம்ப மீதிகளில் தவறு காணப்படுவதும், உரிய நிறைகளில் குறிப்பிடும் தவறு காணப்படுவதும். |

1.6.3 **நிதிப் பாய்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டு வைப்பு வரவு ரூபா 468,352,833 ஆன பெறுமதி நிதிப் பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளுடன் கூடிய நிதி பாய்ச்சலின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய போதும், அப் பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் கூடிய நிதிப் பாய்ச்சலின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | வைப்பு வரவு நிதிப் பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடாக குறிப்பிடப்பட வேண்டும். | விபரிக்கும் குறைபாடு காரணமாக ஏற்பட்ட விடமொன்றாகையால் எதிர்வரும் ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. |
| (ஆ) | எசீஎ–6 படிவத்தில் குறிப்பிடப்படும் நிதியல்லாத சொத்து விற்பனையான ரூபா 1,325,437 நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளுடன் கூடிய நிதிப் பாய்ச்சலின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | சொத்து விற்பனை நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையாக குறிப்பிடப்பட வேண்டும். | விபரிக்கும் குறைபாடு காரணமாக ஏற்பட்ட விடமொன்றாகையால் எதிர்வரும் ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 ஆண்டு முற்பணம் அறவீடான ரூபா 85,385,621 நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளுடன் கூடிய நிதிப் பாய்ச்சலின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | முற்பணம் அறவீடான நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையாகக் குறிப்பிடப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டு சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. |

### 1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உருதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுருதிமிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உருதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் பயனுருதி தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமை பயனுருதிமிக்கதாக நடைமுறைப்படுத்திச் செல்ல தேவையான மாற்றங்களை செய்ய வேண்டுமெனவும், அதன் மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்க வேண்டிய போதும், அத்தகைய மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் நிலவும் நிலைமையினை மீளாய்வு செய்வதாக. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானம் பெறுமதி (ரூபா) | இணங்காமை | பரிந்துரை | கணக்கீடு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | 566,990 | 02 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 2019 திசெம்பர் 31 திகதியன்று 06 மாதங்களை விஞ்சி 02 மாதம் மற்றும் 24 மாதங்களிற்கிடையிலான காலத்தை விஞ்சியிருந்த 07 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் செயற்பட்டு வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரிசெய்ய எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | 37,486,938 | மாவட்ட செயலகம் மற்றும் 10 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 02 ஆண்டுகளை விஞ்சிய 176 வைப்புக்கள் தொடர்பில் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வைப்பு கொடுப்பனவிற்காக திறைசேரியிலிருந்து போதிய முற்பணம் கிடைக்காததால் இத்தாமதம் ஏற்பட்டதாக. |

(ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை
--------------------------

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | 1.2.1 (இ) பிரிவு | 527,545 | ஓபநாயக பிரதேச செயலகத்தினால் 2019 திசெம்பர் 14 திகதி மாதொள பிரிவு – நில செவன அலுவலகத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணம் மதிப்பீட்டு வீதத்தின் அடிப்படையில் நேரடியாக முதல் ஒப்பந்தக்காரரிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவை 1.2.1 (இ) பிரிவுபிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஆரம்ப ஒதுக்கீட்டிற்கு விலை மனு முன்வைத்த ஒரே ஒப்பந்தக்காரர் அவர் ஆவார் என. |
| (ii) | 4.2.1(அ),(ஆ) மற்றும்(இ) பிரிவு | - | குறைந்த பட்சம் மூன்று வருட (03) காலத்திற்கு எதிர்பார்க்கும் பெறுகை நடவடிக்கைகள், பிரதான பெறுகை திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டிய போதும் அவ் ஏற்பாடுகளிற்கு அமைய 05 பிரதேச செயலகங்கள் தொடர்பாக பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 02 பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டிற்காக விரிவான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவை 4.2.1(அ),(ஆ) மற்றும் (இ) பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | பிரதான பெறுகை திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | 5.4.8 (அ) பிரிவு | 98,542 | ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்த உடன்படிக்கை மீரப்பட்டால் பெறுகை நிருவனத்தை பாதுகாப்பதற்காக ரூபா 1,970,841 ஆன ஒப்பந்த தொகையின் 5 சதவீதத்திற்கு குறையாத செயற்பாட்டுக் காப்பொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் பெல்மடுள்ள பிரதேச செயலகத்தினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவை 5.4.8 (அ) பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் குறித்த செயற்பாட்டுக் காப்பொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. |
| (இ) | 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 பொது நிதி சுற்றறிக்கை | | | | |
| | (i) 3.1 பிரிவு | 1,428,596 | தேசிய/மாகாண சமுதாய அடிப்படை சங்கமாக கருத முடியாத அரச ஊழியர்களைக் கொண்ட கொலொன்ன பிரதேச செயலக நலன்புரி சங்கத்துடன் 2019 ஆண்டினுள் 08 ஒப்பந்தங்களை மேற்கொள்ள உடணபடிக்கை செய்யப்பட்டிருந்தது. | 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 பொது நிதிசுற்றறிக்கை க 3.1 பிரிவுபிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | இலாபம் ஈட்டாத நிருவனமாகையால் குறித்த நலன்புரி சங்கத்தினால் அவ் வேலையை செய்து கொண்டதாக. |
| | (ii) 3.2 பிரிவு | 340,359,133 | தகைமையை பரீட்சித்து உறுதிப்படுத்திய பின்னரே சமுதாய அடிப்படை சங்கங்களிற்கு நிர்மாணம், வேலைகள், ஒப்பந்தங்களை ஒப்படைக்க முடியுமான போதும் பெல்மடுள்ள பிரதேச செயலகத்தினால் அவ் ஏற்பாடுகளிற்கு | 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 பொது நிதி சுற்றறிக்கை 3.2 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | சுற்றறிக்கை பிரகாரம் தகைமை பரீட்சிக்கவில்லை எனவும் எதிர்காலத்தில் அத்தவறு ஏற்படாதவாறு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியதாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மாற்றமாக 13 அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழ் 938 கருத்திட்டங்களை மேற்கொள்ள பரிந்துரைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2011 பெப்ரவரி 10 திகதிய இலக்கம் தே.க.ஆ.அ 2011/01 கொண்ட இடர் முகாமை அமைச்சு சுற்றறிக்கையின் 3 பிரிவு. | 2,000,000 | மண்சரிவு அபாய மாவட்டங்களில் கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் நிருவனத்தினால் தேசிய கட்டிட ஆராய்சி அமைப்பினால் குறித்த தகைமை சான்றிதழ்/ பரிந்துரை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் எலபாத்த பிரதேச செயலகத்திற்குரிய கொடாமுள்ள பிரிவிற்கு சொந்தமான நில செவன அலுவலக கட்டிடம் நிர்மாணிக்கையில் அவ் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2011 பெப்ரவரி 10 திகதிய இலக்கம் தே.க.ஆ.அ 2011/01 கொண்ட இடர் முகாமை அமைச்சு சுற்றறிக்கையின் 3 பிரிவுபிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் பரிந்துரையை பெற்றுக் கொள்ள போதிய காலம் காணப்படவில்லை என. |
| (எ) | 2019 ஜனவரி 10 திகதிய இலக்கம் MNPEA 01/2019 கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு வேலைத் திட்டம் சுற்றறிக்கையின் 2.8 பந்தி. | 416,487 | அரச கருத்திட்டங்களை பொது நடவடிக்கைகளுக்காக செயற்படுத்த வேண்டியதுடன் ஒவ்வொறு தனி நபரிற்கு அல்லது தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக நேரடி ஒப்படைப்பு வழங்கக் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள போதும், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தனிப்பட்ட இரண்டு வெற்று காணிகளிற்கு உட்பிரவேச பாதையின் ஓர் பகுதி மற்றும் பக்க மதிலின் ஓர் பகுதியை நிர்மாணிக்க ஒதுககீடு வழங்கப்பட்டிருந்தது. | 2019 ஜனவரி 10 திகதிய இலக்கம் MNPEA 01/2019 கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு வேலைத் திட்டம் 2019 சுற்றறிக்கையின் 2.8 பந்திபிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | காணிக்கு முறையான உட்பிரவேச பாதையொன்று இல்லாததால் இக்காணிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் தலைப்பு 278 இற்காக திட்டத்தின் பிரகாரம் கோர வேண்டிய கட்டுநிதி ரூபா 1,096,996,000 ஆன போதும், கோரிய கட்டுநிதி ரூபா 2,273,485,000 ஆனதில் ரூபா 1,176,489,000 வேறுபாடும்,கிடைத்த கட்டுநிதி ரூபா 1,136,110,000 ஆனதில் கோரிய கட்டுநிதி மற்றும் கிடைத்தல் கட்டுநிதிக்கிடையில் ரூபா 1,137,375,000 ஆன வேறுபாடும், அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட மற்றும் கிடைத்த கட்டுநிதிக் கிடையில் ரூபா 39,114,000 ஆன வேறுபாடும் அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் கட்டுநிதி தேவையை திட்டமிடல் மற்றும் கட்டுநிதிக் கட்டுப்பாடு உரிய முறைப்படி இடம்பெறவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | திறைசேரியுடனான நெருங்கிய தொடர்புகள் மூலம் கட்டுநிதியை ஒழுங்காக முகாமை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானத்துடன் இனங்குவதாகவும், வருடாந்த கட்டுநிதி தேவை வருடாந்த ஒதுக்கீட்டு அதிகார சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படும் ஒதுக்கீட்டை அடிப்படையாகக் கொண்டதாக. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையாக மதிப்பீடு தயாரிக்கப்படாமையினால் 19 செலவின விடயங்களில் ஒதுக்கி வைப்பு 25 சதவீதத்திற்கு மேலதிகமாக தொடர்ந்தும் தேறிய ஒதுக்கீட்டில் 9 சதவீதம் முதல் 62 வரை வீச்சளவான மீதி நிலவியது. இவ்வாறு எஞ்சிய ஒதுக்கீட்டின் கூட்டுத் தொகை ரூபா 39,035,238 ஆனது. இம் மீதியினுள் 278–1–1–0–2509 செலவின தலைப்பிற்காக மீள் நிரப்பு மதிப்பீட்டின் மூலம் இம்புள்பே மற்றும் அயகம பிரதேச செயலாளர் பிரிவினுள் சமூக அடிப்படை பசுமை சங்கம் (Community based Green clubs) நிருவுவதற்காக ரூபா 2,700,000 ஒதுக்கப்பட்ட போதும், அதிலிருந்து ரூபா 344,000 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன்படி முறையாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | முற்பணம் இல்லாமை, செலவுகளை ஒழுங்காக முகாமை செய்தல், பட்டியல் சமர்பிக்காமை, 25 சதவீத கட்டாய சேமிப்பு மேற்கொள்ளல் போன்றவை அம் மீதிகளிற்கான காரணங்களாகும் என. |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளிற்குட்படல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலக்கம் 255/2017 மற்றும் 2017 ஏப்ரல் 27 திகதிய பொது நிதி சுற்றறிக்கையின் 2(அ) பந்தி பிரகாரம் ஊழியர் சமபளங்கள் மற்றும் படிகள் தவிர ஏனைய கொடுப்பனவுகளிற்காக வருடாந்த பாதீட்டு எல்லையினுள் கடன்பாடுகளை இணங்கான வேண்டிய போதும், அதற்கு மாற்றமாக கூட்டுத் தொகை ரூபா 943,209 இற்கான கடன்பாடுகளிற்கு உட்பட்டிருந்தது. | இலக்கம் 255/2017 மற்றும் 2017 ஏப்ரல் 27 திகதிய பொது நிதி சுற்றறிக்கையின் 2(அ) பந்தி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | குறித்த பட்டியல்கள் உரிய ஆண்டில் சமர்பிக்கப்படாமை என. |

**2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நதி ஏற்பாட்டின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 17 பிரதேச செயலகங்களிற்கு ஏனைய 28 அமைச்சுக்கள் /திணைக்களங்களினால் 73 தேவைப்பாடுகளிற்காக வழங்கப்பட்ட ரூபா 3,354 மில்லியன் ஒதுக்கீடுகளிலிருந்து மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 959.9 மில்லியன் ஒதுக்கீடு சேமிப்பாக இருந்தது. அச் சேமிப்பு ஒவ்வொறு அமைச்சுக்கள் /திணைக்களங்களால் கிடைத்த ஒதுக்கீட்டின்ஒதுக்கி வைத்தல் 25 சதவீதத்திற்கு மேலதிகமாக, 05 சதவீதம் முதல் 100 சதவீத வீச்சளவை கொண்டிருந்தது. | தொடர்புடைய வரிசை அமைச்சு/ திணைக்ளம் மற்றும் திறைசேரியுடன் வருட ஆரம்பம் முதல் தொடர்ச்சியான தொடர்புகளினுடன் செயற்பட்டு கருத்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டை உச்ச வகையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒதுக்கீடு எஞ்சுவதற்கு பிரதான காரணமாவது போதிய முற்பாணம் கிடைக்கமை என்பதாகும். |

## 2.5 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலக்கம் 05/2019 மற்றும் 2019 ஜுன் 27 திகதிய பொது நிதி சுற்றறிக்கை ஆலோசணைகளின் பிரகாரம் அரச ஊழியர் முற்பண "ஆ" கணக்கின் கீழ் இடமாற்றம் பெற்றுச் செல்லும்/வரும் அலுவலர்களுக்கு, கடன் தொகையை செலுத்திமுடிய முன்னர் ஓய்வு பெற்றுள்ள மற்றும் இறுதி கடன் தவணையை அறவிட்டு ஒரு வருடத்தை விஞ்சியிருந்த வேலை இடைநிருத்தம் செய்யப்பட்ட அலுவலர்கள் தொடர்பாக ரூபா 1,548,793 ஆன 09 கடன் மீதியை அறவிட மற்றும் தீர்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | இலக்கம் 05/2019 மற்றும் 2019 ஜுன் 27 திகதிய பொது நிதி சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் கடன் மீதிகளை அறவிட மற்றும் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன் மீதிகளை அறவிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக. |

## 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 பிரதேச செயலகங்களிற்குரிய 179 வேலைகளிலிருந்து பெற்ற நிருத்தி வைத்தற்பணம் ரூபா 12,670,727 இற்கான குறித்த தவறு உத்தரவாதக் கால எல்லை முடிவடைந்து கணக்காய்வு திகதிய 2020 ஜனவரி 23 திகதியன்று 02 மாதம் முதல் 34 மாதங்கள் கடந்திருந்த போதும், அதனை விடுவிக்காது தொடர்ந்தும் பிரதேச செயலகங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | தவறு உத்தரவாதக் கால எல்லையை விஞ்சியுள்ள தடுப்புப் பணத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வைப்புக்களை விடுவிக்க போதிய கையிறுப்பு பணம் இல்லையெனவும், தொழிநுட்ப உத்தியோகத்ரினால் வேலை பரிசோதனையின் பின்னர் தடுப்புப் பணத்தை விடுவிப்பதாகவும் குறித்த காரணங்கள் இதற்கு உரியவை எனவும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஜனாதிபதி செயலகத்தின் மூலம் 04 கருத்திட்டங்கள் தொடர்பாக 03 பிரதேச செயலகங்களிற்கு ரூபா 6,906,562 ஒதுக்கீடு வழங்கப்பட்ட போதும் அக் கருதிட்டத்தை செயற்படுத்தாததால் அந் நிருவனங்களிற்கே மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் கிடைத்த ஒதுக்கீடு குறித்த நோக்கத்திற்காக உரிய முறைப்படி பயன்படுத்த கவனமெடுக்க வேண்டும். | சீரற்ற காலநிலை, ஒதுக்கீடு தாமதம், தொழிநுட்ப காரணங்கள், மதிப்பீடு உரிய தினத்தில் கிடைக்காமை மற்றும் கருத்திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக கருத்து முரன்பாடு நிலவியமை போன்ற காரணங்கள் இதற்கு தொடர்புடையவையென. |

### 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 பிரதேச செயலகங்களிற்குரிய 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் அதன் முன்னேற்ற பரிசோதனையின் போது 15 பிரிவுகளின் 52 செயல்கள் அதன் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாமையின் சதவீதம் 25 முதல் 100 சதவீதத்திற்கு இடையில் நிலவியது. | இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதன் இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவலர்களினால் கட்டுப்படுத்த முடியாத விடயங்கள் காரணமாக சில இலக்குகளை அடைய முடியாததாக. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதி அரச காணிகளிற்கு அனுமதிப்பத்திரம் / ஒப்படைப்பத்திரம் வழங்கையில்,08 பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்ட காணி கச்சேரிகளின் எண்ணிக்கை 01 முதல் 09 அளவான குறைந்த வீச்சளவை கொண்டிருந்தமையும், 08 பிரதேச செயலகங்கள் தொடர்பாக அனுமதியற்ற காணிகளை | அனுமதியற்ற காணி ஒழுங்கமைக்கும் செயற்பாட்டை துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச காணிகளிற்கு அனுமதிப்பத்திரம் / ஒப்படைப்பத்திரம் வழங்குதல், பிரதேச செயலாளர் தனித்து செய்யும் நடவடிக்கை அல்லாதது எனவும் அதற்கு தொடர்புடைய ஏனைய நிருவனங்களிலிருந்து |

| | | |
| --- | --- | --- |
| ஒழுங்கமைக்க காணப்படும் காணித்துண்டுகளின் எண்ணிக்கையில் ஒழுங்கமைக்க இனங்காணப்பட்ட அளவு 6 சதவீதம் முதல் 48 சதவீத அளவான குறைந்த மட்டத்தில் நிலவியமையும், ஒரு பிரதேச செயலகத்தினால் ஒழுங்கமைக்கவிருந்த காணிகளை இனங்காணாமையும், மேலும் ஒரு பிரதேச செயலகத்தினால் பிரிவிற்குட்பட்ட அரச காணித் துண்டுகளின் எண்ணிக்கை மற்றும் அனுமதியற்ற காணிகளை ஒழுங்கமைக்க காணப்படும் காணித்துண்டுகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை குறிப்பாக இனங்கண்டிருக்காமை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தினுள் அனுமதியற்ற காணிகளை இனங்காணும் முறைமை மந்த கதியான தன்மையை கொண்டிருந்தது. மேலும் இது தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 20 திகதிய 2008/04 இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை பின்பற்றியிருக்காமை அவதானிக்கப்பட்டது. | | கிடைக்கும் ஆர்வம் / ஒத்துழைப்பின் மீது தாமதம் ஏற்படுவதாக. |

### 3.3 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 04 பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்ய எதிர்பாக்கப்பட்ட மதிப்பீட்டு கிரயம் ரூபா 39.8 மில்லியனான 127 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன. | குறித்த காலத்தினுள் கருத்திட்டத்தை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் திட்டத்தை முறையாக கால எல்லை உள்ளடங்களாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானத்துடன் இனங்குவதாகவும், மாவட்ட செயலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமெனவும். |

**3.4 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 06 பிரதேச செயலகங்களில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்ட மதிப்பீட்டு கிரயம் கூட்டுத் தொகை ரூபா 48.4 மில்லியனான 122 கருத்திட்டங்களின் கருத்திட்டங்களின் நிர்மாணங்களின் தாமதம் காரணமாக அதற்காக ஒதுக்கப்பட்ட நிதிஒதுக்கீட்டின் மீதிரூபா 21.2 மில்லியன் அல்லது 44 சதவீதம் ஆனது. | குறித்த காலத்தினுள் கருத்திட்டத்தை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் திட்டத்தை முறையாக கால எல்லை உள்ளடங்களாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | போதிய கட்டுநிதி கிடைக்காமை, கட்டுநிதி கிடைத்தலின் தாமதம், கருத்திட்டம் செயற்படுத்தப்பட்ட காலப் பகுதியில் அதிக மழை மற்றும் சீரற்ற காலநிலை நிலவியமையும். |
| (ஆ) | 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகள் தொடர்பாக 16 பிரதேச செயலாளர் பிரிவுகளிற்குரிய மாவட்டத்தில் மாற்றுக் காணிகள் வழங்க இனங்காணப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 2456 ஆன போதும், மீளாய்வாண்டு இறுதி வரையும் அவற்றில் தகுதியான காணிகள் வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 1027 மாத்திரம் ஆனது. | தற்போது சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவை அறிக்கையை துரிதமாக பெற்று கனிசமான எஞ்சிய குடும்பங்களிற்கு ஏனும் காணி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணிகளை சுவீகரிக்க நீண்ட காலம் சென்றமை, சுவீகரிக்கப்பட்ட காணிகளில் வதியச் செல்ல பயன்பாட்டாளர்களிடமுள்ள விருப்பமின்மை மற்றும் பொருத்தமான காணி இல்லாமையும் என. |
| (இ) | இரத்தினபுரி மாவட்டத்தில் 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை 15082 ஆனதுடன் வழங்க வேண்டியதாக இருந்த மொத்த இழப்பீட்டுத் தொகை ரூபா 943,862,379 ஆன போதும், 2019 திசெம்பர் 31 திகதி வரை மேலும் வழங்க வேண்டியிருந்த தொகை ரூபா 363,874,761 ஆக இருந்தது. | திறைசேரி மற்றும் குறித்த வரிசை அமைச்சுடனான நெருங்கிய தொடர்புகள் மூலம் குறித்த இழப்பீட்டை செலுத்தக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேசிய காப்புருதி பொருப்பு நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ள இழப்பீடுத் தொகை இது வரை கிடைக்காமை, பிரதேச செயலகப் பிரிவுகளில் மதிப்பீட்டு குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி தேசிய காப்புருதி பொருப்பு நிதியத்தினால் திருத்தப்படுதல் அல்லது மதிப்பிட்டு கோரியுள்ள மொத்த இழப்பீட்டுத் தொகையையும் கிடைக்காமை இதற்கு காரணமானது என. |

**3.5 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 பிரதேச செயலகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிர்மாண ஒப்பந்த மாதிரி பரிசோதனையின் போது 14 வேலைகளின் 39 வேலை விடயங்களிற்காக ரூபா 2,727,033 ஆன தொகை விஷேட நியம வீதத்தின் (SSR) கீழ் செலுத்தப்பட்டிருந்த போதும் மாவட்ட செயலகத்தின் பொறியியலாளர் அல்லது உயர் தொழிநுட்ப அறிவுடைய அலுவலர் ஒருவரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலக பொறியியலாளர் அல்லது உயர் தொழிநுட்ப அறிவுடைய அலுவலர் ஒருவரினால் விஷேட நியம வீதம் (SSR) அங்கீகரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் கருத்திட்டங்களில் ஆலோசனை பிரகாரம் செயற்படுவதாக. |
| (ஆ) | 09 பிரதேச செயலகங்களில் 06 கருத்திட்டங்கள் தொடர்பாக ஒழுங்கான தொழிநுட்ப முறைமையை கடைபிடித்து உரிய பொழிப்புச் சக்தி நிலவியதனை உருதிப்படுத்திக் கொள்ளாது கொன்கிரீட் கலவை பரத்தி நிர்மாணிக்கப்பட்ட 73 பாதைகளிற்குரிய 1,774.45 கன மீட்டர்$^{(m3)}$ கொன்கிரீட் இற்காக ரூபா 46,347,863 தொகை கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. | பாதை நிர்மாணத்திற்காக கொடுப்பனவு செய்கையில் உரிய பொழிப்புச் சக்தி நிலவுவதாக உருதி செய்து கொள்ள வேண்டும். | பாதை குறைபாடுகள் நிவர்த்திக்கப்படுவதாக, அவ்வாறான பரிசோதனையை மேற்கொள்ள ஒதுக்கீடு மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டுமென ஆலோசனை கிடைக்கவில்லை எனவும், அதற்காக தேவையான வசதிகள் நிருவனத்தில் இல்லை எனவும்,தேவையான வசதிகள் கிடைத்தால் அப்பரிசோதனையை மேற்கொண்டு தேவையான பரிந்துரையை பெற்றுக் கொள்வதாகவும், அப்பரிசோரனையை மேற்கொள்ள விஷேட சந்தர்ப்பம் அல்லது பிரச்சினை ஏற்படவில்லை எனவும், பொழிப்பு சக்தியை பரீட்சித்ததுடன் குறை தளங்களை மீள் திருத்துமாறு ஒப்பந்தக்காரரிற்கு ஆலோசனை வழங்கியதாகவும் என்றவாறு பதில் சமர்பிக்கப்பட்டுள்ளமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 05 பிரதேச செயல பிரிவுகளிற்கு 04 அமைச்சுக்கள்/திணைக்களங்களின் கீழ் ரூபா 9,842,506 இற்கு உடன்பட்ட 15 வேலைகள் தொடர்பாக 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 3.2 (iv) மற்றும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரிவு 15 இற்கு மாற்றமாக கமநல அமைப்பிற்கு 5 சதவீத தொகையை பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 3.2 (iv) மற்றும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரிவு 15 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவ்வாறு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்படவில்லை எனவும், ஒப்பந்த சங்கத்திடம் உப ஒப்பந்தம் வழங்குவதில்லை என கடிதமொன்றை பெற்று கோவையிட்டுள்ளதாகவும். |
| (ஈ) | பெல்மடுள்ள பிரதேச செயலகத்திற்குரிய ரூபா 4,000,000 இற்கு உடன்படிக்கை செய்த 02 வேலைகள் தொடர்பாக அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 (i) பிரிவு பிரகாரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய முற்பண செலுத்துகை காப்பொன்றை சமர்பிப்பதன் மீது, ஒப்பந்த தொகையின் 20 சதவீதத்தை உச்சமட்ட முற்பணமாக செலுத்த முடியுமாக இருந்தது.என்னும்அவ் ஏற்பாடுகளிற்கு மாற்றமாக முற்பணம் ரூபா 800,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் மக்கள் பங்களிப்பு மற்றும் ஒப்பந்தக்காரரினால் நிறைவேற்ற வேண்டிய வேலைப் பகுதிகளை வெவ்வேறாக குறிப்பிடும் விரிவான ஏற்றுக்கொண்ட ஒப்படைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 (i) பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானததுடன் இணங்குவதாகவும், எதிர்காலத்தில் 20 சதவீத முற்பணம் செலுத்துகையில் வழிகாட்டிக் கோவையின் ஆலோசனைப் படி நடவடிக்கை எடுக்க உரிய அலுவலரிகளிற்கு ஆலோசனை வழங்கப்பட்டதாக. |
| (உ) | பெல்மடுள்ள பிரதேச செயலகத்திற்குரிய ரூபா 5,804,767 ஆன வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 02 வேலைகளின் இறுதி பட்டியல் மற்றும் திரண்ட அளவையுடனான அளவுப் பத்திரம் தயாரிக்கையில் மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட ரூபா | பட்டியல் பரிந்துரைத்தல், சான்றுறிதியிடல், மற்றும் அங்கீரித்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். | அவதானததுடன் இணங்குவதாகவும், இது தொடர்பான பரிசோதனையொன்றிற்கு ஈடுபடுத்தியுள்ளதாகவும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,822,454 ஆன வேலைகளை ஒப்பந்தக்காரரினால் மேற்கொண்ட வேலையாக கருதி அப்பட்டியல்களை பரிந்துரைத்து, உறுதிப்படுத்தி அங்கீகரித்து செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 03 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 03 அமைச்சுக்கள்/திணைக்களங்களின் கீழ் ரூபா 7,554,668 இற்கு உடன்பட்ட 09 வேலைகளின் நிர்மாணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வின் போது தளர்த்தும் பரிசோனையினூடாக மொழிப்புப் பலம் பரிசீலிக்கப்பட்டதுடன் அப் பாதைகளின் மொழிப்புப் பலம் பொதுவாக காணப்பட வேண்டிய 20N/mm$^2$ மட்டத்திலும் குறைந்த அளவை கொண்டிருந்தது. | பாதை நிர்மாணத்திற்காக கொடுப்பனவு செய்கையில் குறித்த பொழிப்பு சக்தி உள்ளனவா என உருதி செய்து கொள்ள வேண்டும். | குறித்த கொடுப்பனவு செய்யப்படாததால் பொறியிலாளர் ஆலோசனையை பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கை எடுப்பதாக, எதிர்காலத்தில் சரி செய்தல் மேற்கொள்ள உள்ளதாகவும். |
| (எ) | நெடுஞ்சாலை அட்டவணைப்படுத்தப்பட்ட வீதம் (HSR) குறியீட்டு இலக்கம் STI-047 பிரகாரம் கொன்கிரீட் கலவை செய்கையில் கொன்கிரீட் கலவை இயந்திரமொன்றை பயன்படுத்தி கலவை செய்து பாதையிற்கு இட வேண்டிய போதும் 02 பிரதேச செயலகங்களிற்கு உரியதாக ரூபா 2,030,486 இற்கு உடன்பட்ட 03 வேலைகள் தொடர்பாக கொன்கிரீட் போக்குவரத்திற்கு பயன்படுத்தும் இயந்திரத்தை (Truck Mixture) பயன்படுத்தி கொன்கிரீட் கலக்கப்பட்டிருந்தது. | கொன்கிரீட் கலவையிடல் உரிய நியமத்திற்கு செய்யப்பட வேண்டும். | இதன் பின்னர் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு கவனித்துக் கொள்வதாக. |

**3.6 சொத்துக்கள் முகாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச செயலாளரிற்குரிய 20 கிராம அலுவலர் பிரிவுகளில் அமைந்துள்ள பயன்படுத்தப்படாத 21 அரச கட்டிடங்களை பயனுள்ள வேலைகளில் ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வு திகதியான 2020 ஜனவரி 27 திகதியன்று காணி அனுமதியற்ற ஆழுகைக்குட்பட்டிருந்தமை, கட்டிடங்கள் பழுதடைந்து காணப்பட்டமை மற்றும் மூடப்பட்டிருந்தமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | குறித்த ஆதனங்களை உரிய முறைப்படி பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அரச சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக ஒழுங்கான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் பொது செயற்பாடுகளிற்கு பயன்படுத்தும் சந்தர்பம் ஏற்பட்டால் அதற்காக பயன்படுத்துவதாக. |
| (ஆ) | ஓபநாயக பிரதேச செயலகத்திற்குரியதாக ஜனாதிபதி செயலகத்தினால் இலங்கையில் வறுமையை ஒழிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட கிராம சக்தி மக்கள் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த செலவு விடய இலக்கம் 001-2-6-6-2509 கீழ் ரூபா 3,178,000 ஆன ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரிவுகளிலும் அமைக்கப்பட்டுள்ள மக்கள் சங்கங்களிற்கு பிரிவின் சீவனோபாய அபிவிருத்திக்கு, ஆளுமை விருத்திக்கு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு என ஒவ்வொரு பிரிவிற்கும் ரூபா 986,550 வீதம் ரூபா 2,959,650 தொகை 2018 திசெம்பர் 29 திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 திகதியளவில் தெரிவு செய்யப்பட்ட 03 பிரிவிகளிலும் | கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். | கிடைத்துள்ள ஆலோசனைப் படி செயற்பாடுகள் கடைபிடிக்கப்படுவதாக. |

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு செலவிட வேண்டிய 20 சதவீதத்தை மாத்திரம் பயன்படுத்தியிருந்ததுடன் மீதித் தொகை செயற்படாத கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 3.7 அரச அலுவலர்கள் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 880 குறிப்பிடும் ஏற்பாடுகளின் பிரகாரம் 12 மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பிணை வைக்க வேண்டிய 61 அலுவலர்கள் குறித்த பிணை பணத்தை வைப்புச் செய்திருக்கவில்லை எனவும், நிதிப் பிரமாணம் 881(ii) குறிப்பிடும் ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வாறு பிணை வைக்க வேண்டிய தனது கீழ் நிலை அலுவலர்கள் உரிய காலத்தினுள் அவ்வாறு செயற்படுவதனை உரிய பிரதானிகளால் பொருப்பேற்றிருக்காமை அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881(ii) பிரகாரம் பிணை வைப்பு செய்யப்பட வேண்டும். | பிணை வைப்பு செய்யாத அலுவலர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதாக. |

## 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆகஸ்ட் 18 திகதிய உள்ளக கணக்காய்வு ஆலோசனை இலக்கம் 22/2014 கொண்ட பிரதேச செயலாளரின் கடிதத்தில் கட்டிட நிர்மாணத்தின் கீழ் இலக்கம் 04 ஆலோசனை பிரகாரம் புதிய நிர்மாணத்திற்கு பதிலாக பிரதேசத்தில் பயன்படுத்த முடியுமான கட்டிடங்கள் உள்ளனவா என பரீட்சிக்க வேண்டி இருந்தது. எவ்வாறாயினும் இரத்தினபுரி பேறுகெட்டிய பாடசாலை வளவில் பயன்படுத்தக் கூடிய நிலையிலான வர்க்க அடி 1180 ஆன மூடப்பட்ட | 2014 ஆகஸ்ட் 18 திகதிய உள்ளக கணக்காய்வு ஆலோசனை இலக்கம் 22/2014 கொண்ட பிரதேச செயலாளரின் கடிதத்தில் கட்டிட நிர்மாணத்தின் கீழ் இலக்கம் 04 ஆலோசனை பிரகாரம் செயற்பட வேண்டும். | ஐயவினா தொடர்பாக பரிசோதனைக்கு உட்படுத்தியிருப்பதாக. |

பாடசாலை கட்டிடமொன்று இருக்கையில், அக் கட்டிடத்திற்கு முன்பாக மக்கள் பங்களிப்பு ரூபா 961,261 மற்றும் அரச பங்களிப்பு ரூபா 2,000,000 உடன் 729 வர்க்க அடியிலான கள்லின்ன நில செவன காரியாலயம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக பெல்மடுள்ள பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் அரச கட்டிடம் இல்லாத கிராம அலுவலர் பிரிவிற்கு இந்த நில செவன அலுவலகம் நிர்மாணிக்கப்படவிருந்த சந்தர்ப்பம் இல்லாமல் போனதில் அரச நிதி போதிய கவனம் செலுத்தப்படாமல் செலவிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 3.9 முகாமைத்துவ குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 பிரதேச செயலகங்கள் தொடர்பாக ரூபா 13,225,131 செலவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பராமரிப்புக் காலம் முடிவடைந்த 16 பாதைகளை முறையாக குறித்த பிரதேச சபைகளுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் எஹலியகொட பிரதேச செயலகத்திற்குரிய 13 வேலைகளினுள் பிரதேச சபையினால் பராமரிக்கப்படாத ஏனைய நிருவனங்களிற்கு சொந்தமான கிரயம் ரூபா 4,522,000 ஆன 04 நிர்மாணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பராமரிப்பு காலம் முடிவடைந்த பாதைகளை முறையாக உரிய பிரதேச சபைகளுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பாதைகளை உரிய பிரதேச சபைகளுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், 04 ஏனைய நிர்மாணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை சீர் செய்யவதாகவும். |
| (ஆ) | 03 பிரதேச செயலகங்களுக்குரிய 12 ஓய்வு பெற்றவர்களுக்கு 1,772,635 மற்றும் அயகம பிரதேச செயலகத்தில் அநாதைகள் ஓய்வூதியம் உரித்துடைய ஒருவருக்கு ரூபா 136,998 ஆக கூட்டுத் தொகை ரூபா 1,909,633 ஆன மிகை செலுத்துகை கணக்காய்வு திகதிய 2020 ஜனவரி 23 அன்றும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகை செலுத்துகை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அயகம பிரதேச செயலகத்திற்குரிய ஓய்வூதிய கொடுப்பனவு 2020 ஜனவாரி முதல் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக உரிய தரப்பினர் அறிவூட்டப்பட்டுள்ளதாக. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 03 பிரதேச செயலகங்களுக்குரிய 04 வேலைகளிற்காக ரூபா 5,353,164 செலுத்தி கட்டிட வேலைகளை பூர்த்தி செய்து 2017 திசெம்பர் மாதம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட போதும், கணக்காய்வு திகதியான 2019 திசெம்பர் வரை கட்டிடத்திற்கு தேவையான நீர் மற்றும் மின்சார வசதிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மின்சாரம் மற்றும் நீர் அத்தியவசிய விடயமாகையால் வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீட்டுடனான விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டுள்ள போதும் இது வரை ஒதுக்கீடு கிடைக்கவில்லை எனவும்,குறித்த பரிசோதனைகளிற்கு அனுப்பப்பட்டுள்ளது போன்ற காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. |

## 3.10 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பிரதேச செயலகத்தற்குரிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருறந்த கணக்காய்வு பந்திகளில் காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக பிரதேச செயலகத்தினால் சீர் செய்திருக்காத பந்திகளிற்கான தொடர்பு பின்வருமாறு.

| **கணக்காய்வாளர் நாயக அறிக்கையின் தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | | | |
| 2013 | 1.7(அ)(i) | குருவிட்ட பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தில் காணப்பட்ட பழைய கூரை மர வளையல் பொருத்தி புதிதாக செய்வதற்காக ரூபா 214,346 செலுத்தியிருந்த போதும், அதற்காக பழைய கூரையில் காணப்பட்ட கீழ் குற்றி மற்றும் வீட்டு வளைகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | இக் கொடுப்பனவு தொடர்பாக பொருப்புடைய தரப்பினரிற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது அலுவலர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதாக. |
| 2015 | 3.12(இ)(iv) | 2010 ஆண்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் 2015 திசெம்பர் வரையும் அவற்றின் வேலைகளை பூர்த்தி செய்து நோக்கத்துடனான வேலையில் ஈடுபடுத்த முடியாதிருந்தமையால் 05 கலாசார மத்திய நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக அக்காலப் பகுதியினுள் செலவிடப்பட்ட ரூபா 12,952,497 விளைவற்று நிலவியது. | எஞ்சிய வேலைகளை துரிதமாக பூர்த்தி செய்து குறித்த மத்திய நிலையத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 மத்திய நிலையங்கள் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளதாகவும், 02 மத்திய நிலையங்கள் மதிப்பீடு தயாரிக்கப்படுவதாவும், ஒரு மத்திய நிலையத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் பதில் வழங்கப்பட்டுள்ளது. |

## 4 நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் சபையின் "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030" பிரகாரம் மாவட்ட செலயகம் தொடர்பான நோக்கம் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எவ்வித உள்ளக சுற்றறிக்கை வெளியிடல் அல்லது வழிகாட்டல் செய்திருக்காத காரணத்தால் 03 பிரதேச செயலகங்களில் 2019 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நோக்கம் மற்றும் இலக்குகள் பற்றி பயனுள்ளவாறு அறிவூட்ட சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல் செய்யப்பட வேண்டுமெனவும் நிருவனத்துடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயல் நடவடிக்கை திட்டத்திற்குட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக உள்ளக சுற்றறிக்கை வெளியிடுவது பற்றி எவ்வித ஆலோசனையும் அமைச்சிலிருந்து அல்லது நிலைபேறான அபிவிருத்தி சபையினால் வழங்கவில்லை எனவும், எவ்வாறாயினும் இது தொடர்பாக நடைமுறைப்படுத்த முடியுமான நிகழ்சித் திட்டங்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்துவது பற்றி பிரதேச செயலாளர்கள் மற்றும் குறித்த அலுவலர்கள் அறிவூட்டப்பட்டதாக. |

## 5 நல்லாழுகை

### 5.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அரச நிருவனங்கள் மூலம் சேவைகளைப் பெறும் பொது மக்களின் தேவைகளை துரிதமாக,வினைத்திறனாக, தரமாக மற்றும் தொடர்ந்து மேற்கொள்வதாக எழுத்து மூல பொருத்தமொன்றாக ஒவ்வொறு அரச நிருவனங்களிலும் பிரசைகள் சேவை வழங்கும் உடன்படிக்கை ஒன்றை நிருவும் நோக்கில் 2008 பெப்ரவரி 06 திகதிய இலக்கம் 05/2008 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையூடாக இவ் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இந் நோக்கங்களை அடைந்து கொள்வது சம்பந்தமாக 06 பிரதேச செயலகங்கள் தொடர்பாக | 2008 பெப்ரவரி 06 திகதிய இலக்கம் 05/2008 கொண்ட மற்றும் 2018 ஜனவாரி 24 திகதிய இலக்கம் 05/2008(i) கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | துரிதமாக இது தொடர்பான நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு. | | |
| • மேற் குறிப்பிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் வழிகாட்டல்களின் பிரகாரம் பிரசைகள் உடன்படிக்கையை ஆரம்பித்து செயற்படுத்துகையில் ஆய்வொன்று, பகுப்பாய்வு போன்று திட்டமிடலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய போதும், 5 –10 ஆண்டுகளிற்கு முன் தயாரிக்கப்பட்ட நகல் தவிர வேறு எவ்வித வழிகாட்டியும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்து. | மேற்குறிப்பிட்டவாறு | மேற்குறிப்பிட்டவாறு |
| • இச் சுற்றறிக்கையின் 2.3 பந்தி பிரகாரம் குறித்த நிருவனத்தினால் திட்டமிடப்பட்டுள்ளவாறு பிரசைகள் உடன்படிக்கையை தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதலும், அதன் சேவைகளை உச்ச பயனுடன் மற்றும் தரத்துடன் வழங்குகின்றமை உருதி செய்யப்பட்டுள்ளதா என பரிசோதிப்பதற்காக மேற்பார்வை முறைமையொன்றை செயற்படுத்த வேண்டிய போதும், இவ் உடன்படிக்கையை செயற்படுத்துவது தொடர்பாக பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வைக்கு உட்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | மேற்குறிப்பிட்டவாறு | மேற்குறிப்பிட்டவாறு |
| • 2018 ஜனவரி 24 திகதிய 05/2008 (I) இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் நிருவன தலைவர் தனது தனிப்பட்ட கவனத்தை செலுத்தி | மேற்குறிப்பிட்டவாறு | மேற்குறிப்பிட்டவாறு |

பிரசைகள்/சேவைபெறுனர் உடன்படிக்கையை அறிமுகம் செய்வதுடன் தொடர்பான ஆலோசனைகளை உச்ச நோக்கில் பயன்படுத்த அறிவித்திருந்த போதும், அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.